**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ம் நாள் புதன்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.99/2024</u>**
**<u>CNRNO.TNTP150005442024</u>**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் டவுன், கதவு எண்.19, சௌடாம்பிகை அம்மன் தெரு, என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். சுந்தரம் செட்டியார் குமாரர் சுமார் 68 வயதுள்ள S. மதுரைவீரன்

... வாதிகள்

// எதிராக //

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், ஜெயங்கொண்டான் மஜரா, ராசிபுரம் கிராமத்தில் வசிக்கும் முத்துசாமி குமாரர் சுமார் 56 வயதுள்ள M. ராஜேந்திரன்

2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், ஜெயங்கொண்டான் மஜரா, ராசிபுரம் கிராமத்தில் வசிக்கும் ராஜேந்திரன் மனைவி சுமார் 49 வயதுள்ள R. தனம்

... பிரதிவாதிகள்

வாதியிடம் பிரதிவாதிகள் கடனுறுதிச்சீட்டின் பேரில் பெற்ற அசல் கடன் தொகை ரூ.4,00,000.00/-த்திற்கு தற்போதைய வழக்குரை தொகை ரூ.4,93,000.00/-ம், உரிய வட்டியும், பின்வட்டி கோரியும், செலவுத்தொகை கோரியும், வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1 -ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு 16.10.2024 -ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 18.10.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. தாவா பரிகாரத்தின் மதிப்பு ரூ.4,93,000.00/-, அதற்கு தமிழ்நாடு முத்திரை கட்டணச்சட்டம் 14/55 பிரிவு 22(திருத்தப்பட்ட சட்டம் 17/2003)-ன் கீழ் நீதிமன்ற கட்டணம் ரூ.14,790.00 செலுத்தப்பட்டுள்ளது.

**வழக்குமூலம்** .. 15.03.2022, 27.06.2024, 29.06.2024 ஆகிய தேதிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் டவுனில் வழக்குமூலம் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கானது என் முன்பாக இறுதியாக கடந்த 15.06.2026 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு. K. செல்லதுரை அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, 2-ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. V. மனோகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், 2-ம் பிரதிவாதி தரப்பில் வாதுரை வழங்க போதிய வாய்ப்புகள் வழங்கியும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

**தீர்ப்பாணை**

1.வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2.வழக்குரை தொகை ரூ.4,93,000.00/-ம், அசல் தொகை ரூ.4,00,000/-த்திற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியும், வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3.வழக்கு செலவுத்தொகை ரூ.14,800/- ஐ வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**செலவுத்தொகை பட்டியல்**

| வ.எண். | விவரம் | வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு | |
|---|---|---|---|---|---|
| 1. | பிராதுக்கு நீதிமன்ற கட்டணம் | 14790 | .00 | -- | -- |
| 2. | வக்காலத்து | 10 | .00 | -- | -- |
| மொத்தம் | | 14800 | .00 | -- | -- |

2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ம் நாள் இந்நீதிமன்ற கையெழுத்தும், முத்திரையும் இடப்பட்டது.

(Sd)/-C. Vijaykarthik
சார்பு நீதிபதி,
துறையூர்.